C·O·L

CEMCA

SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE KANCHIPURAM

# செவிச்செல்வம்

# “Diploma in Community Radio & Mass Communication”

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

## CHAPTER 3 - RESEARCH AND ANALYSIS FOR COMMUNITY RADIO

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# INSTITUTIONAL FRAMEWORK ANALYSIS AND DISCUSSION

# சமூக வானொலி நிலைய நிறுவன கட்டமைப்பும் விவாதங்களும்

CHAPTER 03
EPISODE 15

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# நிறுவன கட்டமைப்பை பற்றிய ஆய்வு

- ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ருதி 90.8 fm சமுதாய வானொலி நிலையம், நிறுவன கட்டமைப்பை பற்றிய ஆய்வினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஏனாத்தூர் என்னும் கிராமத்தில் நடத்தியது.

- மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படை தரவுகள்
  - பாலினம் மற்றும் வயது
  - மதம் மற்றும் சாதி
  - கல்வி
  - பணிமுறை (தொழில்)
  - வீட்டு சொத்து
  - அரசாங்கம் செயல்படுத்தும் திட்டம் தொடர்பான பிரச்சனைகள்
  - அச்சு ஊடகத்தை அணுகல்

# பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பதிலளித்தவர்கள்

- பேட்டி கணக்கெடுப்பின் படி பெரும்பான்மையான ஆண்கள் தான் பதிலளித்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. இதில் 70 விழுக்காடு பதிலளிப்பவர்கள் ஆண்கள் தான்
- பெரும்பாமையாக (23 விழுக்காடுக்கு மேல் ) வளர்ந்த மற்றும் நடுத்தர வயதினர்கள் தான் இதற்கு பதிலளிக்கிறார்கள்.
- இதில் 2 விழுக்காடு பதிலளித்தவர்கள் மூத்த குடிமக்கள் (9 விழுக்காடு ) அல்லது 21 வயதிற்கு கீழ் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

# மதம் மற்றும் சாதி

- மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்த கிராமங்களில் அதிகம் வசிப்பவர்கள் இந்துக்களாகவும் இருக்கிறார்கள்.

- இங்கு பதிலளிப்பவர்களில் 70 விழுக்காடு இந்துக்களாகவும், இருக்கிறார்கள்.

- கிராமங்களில் 50 விழுக்காடுக்கு மேல் பதிலளிப்பவர்கள் இந்துக்களாகவே இருக்கிறார்கள். மீதமுள்ள 40 விழுக்காடு குடும்பங்கள் பின்தங்கிய சாதி வகையை சார்ந்தவர்கள். ஆனால் இதிலும் 10 விழுக்காடு குடும்பங்கள் அட்டவணை சாதி வகையை சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

# கல்வி

- நான்கில் ஒரு பகுதி மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள், ஆனாலும் இதில் படிப்பறிவுள்ளவர்களில் 90 விழுக்காடு மக்களுக்கு வாசிக்கவும் எழுதவும் தெரியும்.
- இதை தவிர மீதமுள்ள பதிலளிப்பவர்களில் 51 விழுக்காடு மக்கள் தொகையில் உள்ளவர்கள் ஆரம்ப மற்றும் நடுத்தர நிலை கல்வியை எட்டியவர்களாக இருக்கிறார்கள்.
- இதில் 23.5 விழுக்காடு மக்கள் பல்கலைக்கழக நுழைவுரிமை பெற்றவர்களாகவும், 5 விழுக்காடு இடை நிலை கல்வியும், 5 விழுக்காடு பட்ட படிப்பு பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இங்கு உள்ள மக்கள் மேல் நிலை படிப்புகளில் பற்றாக்குறையாக இருக்கிறார்கள் என்று ஆய்வு வெளிப்படுத்துகிறது.

# பணிமுறை (தொழில்)

- பெரும்பான்மையான மக்கள் பண்ணை வகை தொழிலும் மற்றும் 10.3 விழுக்காடு மக்கள் தொகை பேட்டி அடிப்படையில் தொழில் செய்கிறார்கள்.
- 11.8 விழுக்காடு பதிலளிப்பவர்கள் தொழிலாளர்களாகவும் 10.3 விழுக்காடு இல்லத்தரசிகள் அல்லது மாணவர்கள் அல்லது வேலையற்றவர்களாகவும் 32.3 விழுக்காடு சுய வேலைவாய்ப்பு அல்லது அரசாங்க வேலை அல்லது தனியார் வேலை செய்பவர்களாகவும் இருக்கிறார்கள்.
- மீதமுள்ள மக்கள் தொகையில் ஓய்வு பெற்ற அல்லது வேறு ஏதாவது தொழில் செய்பவர்களாக இருக்கிறார்கள். இந்த பகுதியை பொறுத்தவரையில் விவசாயத்தில் இருந்துதான் அதிகமான வருமானம் கிடைக்கிறது என்று ஆய்வு வெளிப்படுத்துகிறது.

# வீட்டு சொத்து

- பேட்டி அடிப்படையில் வீட்டின் சொத்து உள்நாட்டு மற்றும் அசையும் சொத்தாக இருப்பதாக காட்டுகிறது.
- சமூகத்தில் குடியிருப்பவர்களில் 97.1 விழுக்காடு தொலைபேசி தங்களுடைய வீட்டில் வைத்திருப்பதாகவும், 67 விழுக்காடு மக்கள் இருசக்கர வாகனம் வைத்திருப்பதாகவும், 32. 5 விழுக்காடு சைக்கிள், 12 குளிர்விப்பான், 12 குளிர்காப்பப்பெட்டி, 58.3 சொந்தமாக வானொலி, 3 சொந்த டிராக்டர்கள் மற்றும் 95.6 விழுக்காடு மக்கள் சொந்தமாக தொலைக்காட்சி பெட்டிகள் வைத்திருக்கிறார்கள்.
- மிகக்குறைந்த மக்கள் சொந்தமாக துணி துவைக்கும் இயந்திரம், போன்கள், CD இயக்கி, கணிப்பொறி மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வைத்திருக்கிறார்கள்.

# அரசாங்கம் செயல்படுத்தும் திட்டம் தொடர்பான பிரச்சனைகள்

- பெரும்பான்மையான மக்கள் (50 விழுக்காடுக்கு மேல் ) கூறுவது என்னவென்றால், உள்ளூர் நிர்வாகம் தங்களை புறக்கணிப்பதாகவும் மற்றும் அவர்களுக்கே அரசாங்கம் செயல்படுத்தும் திட்டம் மற்றும் நிகழ்ச்சிகளை பற்றி தெரியவில்லை என்றும் கூறுகிறார்கள்.
- எனவே இந்த மக்களுக்கு அரசாங்க திட்டங்களை பற்றிய செய்திகளை கூறுவதும் அதை எப்படி பயன்படுத்தி கொள்வதும் என்பதை பற்றிய செய்தியையும் தெரியப்படுத்துவது மிகவும் அவசியம்.

# அச்சு ஊடகத்தை அணுகல்

- அச்சு ஊடகத்தை அணுகுதல் இந்த பகுதியில் மிகவும் குறைவு.
- மிக குறைவான மக்கள்தொகை செய்தித்தாள்களை அல்லது பத்திரிகைகளையும் அணுகுகின்றனர்.
- ஏறத்தாழ 32.4 விழுக்காடு மக்கள் செய்தித்தாள் வாங்குகிறார்கள், அதே வேலையில் (100 க்கு 5) மக்கள் தங்கள் வீடுகளில் பத்திரிக்கைககளை வாங்குகிறார்கள்